தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## 28.10.2013

### "பட்டியல் விலையில் மட்டுமே உரம்,பூச்சி மருந்துகள் விற்க வேண்டும்

அரசு நிர்ணயித்த விலையை பட்டியலிட்டு அதனடிப்படையில் மட்டுமே உரம், பூச்சி மருந்துகளை விற்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ்.செல்லத்துரை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தற்போது பருவமழை துவங்கியுள்ளதைத் தொடர்ந்து மாவட்டத்தில் விவசாயப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு தரமான உரங்கள், பூச்சி மருந்துகள் கிடைத்திடும் வகையில் மாவட்டத்தில் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

பூச்சி மருந்து விற்பனை கடைகளில் உரிமத்தை உரிய காலத்தில் புதுப்பிக்காமலும், பூச்சி மருந்து பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை முறையாக பராமரிக்காத நிறுவனங்களின் விற்பனை உரிமம் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்.

உரக்கட்டுப்பாடு ஆணை மற்றும் பூச்சி மருந்து சட்ட விதிமுறைகளை மீறுபவர்கள் மீது சட்டவிதிகளின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### கதர், கைத்தறிகளுக்கு 20 சதவீதம் மானியம்: அமைச்சர் தகவல்

கதர் மற்றும் கைத்தறி ஜவுளிகளுக்கு மத்திய அரசு 20 சதவீதம் மானியம் அளித்துள்ளதாக மத்திய கைத்தறித் துறை தனி அமைச்சர் மற்றும் ரயில்வே இணை அமைச்சர் முனியப்பா தெரிவித்தார்.

காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக்கு அமைச்சர் முனியப்பா ஞாயிற்றுக்கிழமை தரிசனம் செய்ய வருகை தந்தார்.

அவரை நடனம் சாஸ்திரிகள் வரவேற்றார். சிறப்பு தரிசனத்தை முடித்துவிட்டு வந்த அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியது:

கதர் மற்றும் கைத்தறி, பட்டுத் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசு, கைத்தறி மேம்பாட்டு நிதியம் மூலம் 20 சதவீதம் மானியம் வழங்கி வருகிறது.

இது கதர், கைத்தறி துணிகள் மற்றும் கைத்தறி பட்டுத் தொழிலைப் பாதுகாக்கவும், விற்பனை அதிகரிக்கவும், நெசவுத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் பிரித்து அளிக்கப்படுகிறது.

அதன்படி 20 சதவீத மானியத்தில் 15 சதவீதம் வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடியாக வழங்கப்படுகிறது.

மீதமுள்ள 5 சதவீதம் நெசவாளர்கள் மற்றும் மார்க்கெட்டிங் பிரிவுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

இதன் மூலம் நெசவாளர்கள் பாதுகாக்கப்படுவர் என்றார் அமைச்சர் முனியப்பா.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் ஒரத்தநாடு, கல்லணை ஆகிய இடங்களில் 30 மி.மீ. மழை பெய்துள்ளது.

கோத்தகிரி, வாடிப்பட்டி, ஊட்டி, பேச்சிப்பாறை, காரைக்கால் ஆகிய இடங்களில் 20 மி.மீ. மழையும், மயிலாடுதுறை, சோழவரம், காமாட்சிபுரம், திருவள்ளூர்,

ஒகேனக்கல், கொடைக்கானல் ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**மழை நின்றதால் விவசாயிகள் கவலை**

மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதிகளில் மழை நின்றதால் விவசாயப் பணிகளை தொடர முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு மழைக்காலம் தொடங்கியும் மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதிகளில் மழை பெய்யாமல் வெயில் கொளுத்தி வந்தது. தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் விவசாயப் பணிகளை தொடங்க முடியாமல் இருந்தனர். இப்பகுதிகளில் பெரும்பாலும் வைகைப்பாசனத்தை நம்பித்தான் விவசாயம் நடைபெறுகிறது. இளையான்குடி வட்டத்தில் ஒரு பகுதி விவசாயம் மட்டும் வைகைப்பாசனத்தை நம்பி உள்ளது.

பல பகுதிகள் வானம் பார்த்த பூமியாகத்தான் உள்ளன. இந் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து நிலங்களை உழுது நாற்று நடும் பணியிலும் விதை பாவும் பணியிலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மழை பெய்தபோது வானிலை ஆய்வு மையம் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டதாக அறிவித்தது. இப் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து இனி மழை தொடரும், வைகையாற்றிலும் தண்ணீர் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால் இவர்களது இந்த மகிழ்ச்சி இரண்டொரு நாட்கள் கூட நீடிக்கவில்லை.

இப்பகுதிகளில் பெய்துவந்த மழை தற்போது நின்றுவிட்டது. வைகை அணை நீர்பிடிப்பு பகுதிகளிலும் போதுமான மழை இல்லை. இதனால் மழை மற்றும் வைகைத் தண்ணீரை நம்பி விவசாயப் பணிகளை மேற்கொண்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இளையான்குடி வட்டத்தில் வானம் பார்த்த பூமியான பல இடங்களில் விவசாயப் பணிகள் தொடங்கப்படாமல் நிலங்கள் தரிசாகவே கிடக்கிறது. பல கிராமங்களில்

விதைப்பு முறையில் உழுது விதை பாவப்பட்ட நிலங்களில் விதைகள் முளைக்காமல் உழுத தடம் மட்டுமே காணப்படுகிறது.

இந்த பகுதிகளில் விவசாயம் செய்து நஷ்டத்தை சந்தித்து வரும் விவசாயிகள் கவலையுடன் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாகவே விவசாயம் தொடங்கப்படும் காலத்தில் மழை பெய்யும். இந்த மழையை நம்பி நகைகளை அடமானம் வைத்தும் கடன் வாங்கியும் விவசாயப் பணிகளை தொடங்கி விடுவோம். அதன்பின் நாற்று வளர்ந்து அறுவடைக்கு தயாராகும் நிலையில் வானம் பொய்த்துப்போய் மழை பெய்யாமலும் வைகையில் தண்ணீர் வராமலும் நாற்றுகள் கருகி மாடுகளுக்கு தீவனமாகி விடும் நிலைதான் இருந்து வருகிறது. இதே நிலை இந்தாண்டும் தொடர்ந்தால் விவசாயிகள் இனி விவசாயத்தில் ஆர்வம் காட்டாத நிலைதான் உருவாகும் என்றனர்.

**விவசாயப் பணிகளுக்கு ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பயனாளிகளை பயன்படுத்த வேண்டும்**

விவசாயப் பணிகளுக்கு ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பயனாளிகளைப் பயன்படுத்த வேண்டும் என, தமிழக விவசாயிகள் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு தினத்தை முன்னிட்டு, புன்செய் தானியங்கள்-உணவுத் திருநாள் நிகழ்ச்சி, காந்தி அருங்காட்சியகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, வழக்குரைஞர் த. குருசாமி தலைமை வகித்தார். சம்பத்குமார் முன்னிலை வகித்தார். வழக்குரைஞர் கே. ஜோசப் சேவிராஜ் வரவேற்றார். உணவுத் திருநாளை தொடங்கி வைத்துப் பயனாளிகளுக்கு கையேட்டை, மதுரை மாவட்ட ஊராட்சித் தலைவர் மு. தர்மராஜா வழங்கினார்.

பின்னர், காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மார்க்கண்டன் தமது சிறப்புரையில், சிறுதானிய விவசாயத்துக்கு அரசு மானியம் அளிக்கவேண்டும். ஊடுபயிர் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், ஐக்கிய விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த வையாபுரி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ராஜம்மாள், புலியூர் நாகராஜன் மற்றும்

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியக்குழு உதவித் தலைவர் ஏ. ராமகிருஷ்ணன், தனக்கன்குளம் ஊராட்சித் தலைவர் கே. கருத்தகண்ணு, பழையூர் ஊராட்சித் தலைவர் டி. மாயாண்டி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத் தீர்மானம் குறித்து வழக்குரைஞர் த. குருசாமி கூறுகையில், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில் செயல்படுத்துவது அவசியம். கடந்த 1978 இல் புன்செய் விவசாயத்தில் தமிழகம் சிறந்து விளங்கியது. ஆனால், தற்போது விவசாயத்தில் 17 சதவிகிதத்தை இழந்துவிட்டோம்.

அகில இந்திய அளவில் விவசாய நிலம் கூடுதலான நிலையில், தமிழகத்தின் பங்கு குறைந்திருப்பது கவலைக்குரியது. எனவே, அரசு விவசாயத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

உணவுத் திருநாளை முன்னிட்டு, அட்சயாவின் தனலெட்சுமி ஃபுட்ஸ் சார்பில், வரகுப் பிரியாணி, கேப்பை முறுக்கு, புட்டு, கம்மங்கூழ், சுக்குமல்லி தேனீர், அடைதோசை மற்றும் திணை பாயாசம் உள்ளிட்ட பாரம்பரிய உணவுகள் வைக்கப்பட்டிருந்தன.

## "தீபாவளிக்குள் பால் கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால் பால் நிறுத்தப் போராட்டம்

தீபாவளிக்குள் பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்தாவிட்டால் தமிழகம் முழுவதும் பால் நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என்று உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்லமுத்து தெரிவித்தார்.

பல்லடம் அருகே, வேலம்பாளையம் கிராமத்தில் உழவர் உழைப்பாளர் கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத் தலைவர் கே.சி.எம்.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் சி.கே. ஈஸ்வரன், கோவை மாவட்டத் தலைவர் எஸ்.எல்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி தலைவர் வாவிபாளையம் சோமசுந்தரம் வரவேற்றார். இக்கூட்டத்தில் கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்லமுத்து , ஈரோடு மாவட்டத் தலைவர் வி.என்.மகேஸ்வரன், அவினாசிபாளையம் நடராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர்.

தொடர்ந்து கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்லமுத்து செய்தியாளர்களிடம் கூறியது:

இந்த ஆண்டு கடும் வறட்சியால் விவசாயிகள் எந்த பயிர் சாகுபடியையும் முழுமையாகச் செய்ய முடியவில்லை. வறட்சியால் ஒரு கோடி தென்னை மரங்கள் கருகி விட்டன. சூறாவளி காற்றால் பல்லாயிரக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்து விட்டன. இது குறித்து தமிழக அரசு கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

அரசு, தனியார் விதைகள் முளைப்புத் திறன் இன்றி போலியாக உள்ளன. தாராபுரம் பகுதியில் மட்டும் 30 போலி விதை நிறுவனங்கள் உள்ளன. முளைப்புத் திறனற்ற விதைகளால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். எனவே, தரமுள்ள விதைகளை, அரசு தோட்டக்கலைத் துறை மூலமாக விநியோகிக்க வேண்டும்.

கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.3,500 என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.15ஆ யிரம் என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மாட்டுத் தீவனம் விலை 200 சதவீதம் உயர்ந்து விட்ட நிலையில், பால் கொள்முதல் விலை மட்டும் உயர்த்தப்படவேயில்லை. இதனால் கால்நடைகளை வைத்து வாழ்க்கை நடத்தும் பால் உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே, வரும் தீபாவளிக்குள் பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்தாவிட்டால், பால் உற்பத்தியாளர்களுடன் இணைந்து தமிழகம் முழுவதும் பால் நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும்.

மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு அளிக்கும் மானியம், சலுகையில் மின்சாரத்தைத் தவிர வேறு எதுவும் முழுமையாக விவசாயிகளுக்குச் சென்றடைவதில்லை.

ஏற்காடு இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளருக்கு உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் ஆதரவு தெரிவிப்பதோடு, ஏற்காடு தொகுதியில் தேர்தல் பிரசாரத்தையும் மேற்கொள்ள உள்ளோம்.

**பல்லடம் கறிக்கோழி உற்பத்தியை குறைக்க பி.சி.சி. முடிவு**

கறிக்கோழி உற்பத்தியை குறைக்க பி.சி.சி. முடிவு செய்துள்ளது.

தமிழகம், கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. சனிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.57-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் ஞாயிற்றுக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்தி செலவு ரூ.70-க்கு மேல் ஆகிறது. விலை வீழ்ச்சியால் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை குறையக் காரணம், சில்லரை விற்பனையில் அதிக விலைக்கு கோழி இறைச்சி விற்பனை செய்வதால் நுகர்வு குறைந்து விடுகிறது. பண்ணைக் கொள்முதல் விலையை எவ்வளவு குறைத்தாலும் பெரும்பாலான கடைகளில் சில்லரை விற்பனையில் கிலோ ரூ.150-க்கு குறைவாக விற்பதில்லை. பி.சி.சி. நிர்ணயம் செய்யும் விலைக்கு ஏற்ப சில்லரை விற்பனையில் கோழி இறைச்சி விற்க கடைக்காரர்கள் முன் வர வேண்டும்.

தற்போதைய நஷ்டத்தில் இருந்து தப்பிக்க 20 சதவீதம் கறிக்கோழி உற்பத்தியை குறைக்க பி.சி.சி. முடிவு செய்து இருப்பதாக அதன் செயலாளர் பல்லடம் சுவாதி கண்ணன் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

**பயிர்க் காப்பீட்டு தொகை வழங்கக் கோரி போராட்டம் நடத்த முடிவு**

நிலுவையிலுள்ள பயிர்க் காப்பீட்டுத் தொகையை வழங்கக் கோரி, விவசாயிகள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருவாரூரில் அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக சம்பா நெல் பருவத்தை காரீஃப் பருவத்தில் சேர்க்காமல், சம்பா அறுவடை முடியும் மார்ச் மாதத்துக்குப் பிறகு மூன்று மாதங்களில் இழப்பீட்டை வழங்கும் வகையில் மத்திய அரசு தனது திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் மாதத்தில் சங்கம் சார்பில் போராட்டம்

நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. கூட்டத்தில் சங்க மாவட்டச் செயலர் மாசிலாமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"நாகையில் கால்நடைகள் இறப்பு விரைவில் தடுக்கப்படும்**

நாகை மாவட்டத்தில் கால்நடைகள் இறப்பு ஓரிரு நாள்களில் தடுக்கப்படும் என்றார் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் இரா. பழனிச்சாமி.

மயிலாடுதுறை, செம்பனார்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மாடுகள், ஆடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு, திடீர் இறப்புக்குள்ளாகி வருகின்றன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சுமார் 200-க்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நிலையில், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் இரா. பழனிச்சாமி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட கிடாரங்கொண்டான், தலைச்சங்காடு, குரங்குபுத்தூர், கீழ்ப்பள்ளக் கொல்லை, மேலப் பள்ளக்கொல்லை, கீழையூர் மற்றும் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட வில்லியநல்லூர் ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கால்நடை மருத்துவ அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், நோய் பரவாமல் தடுக்க வேண்டிய நடைமுறைகளை விரைவாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது: கால்நடைகள் அதிகம் இறப்புக்குள்ளான பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரங்கம்பாடி, மயிலாடுதுறை, குத்தாலம் மற்றும் சீர்காழி வட்டப் பகுதிகளில் 22 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நோய் பாதிப்புக்குள்ளான கால்நடைகளுக்குத் தொடர் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கால்நடை மருத்துவமனைகளில் போதுமான மருந்துகள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் வரும் ஓரிரு நாள்களில் கால்நடை இறப்பு முற்றிலுமாகத் தடுக்கப்படும் என்றார் பழனிச்சாமி.

பூம்புகார் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். பவுன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், மயிலாடுதுறை சார் ஆட்சியர் திவ்யதர்ஷினி, மண்டல இணை இயக்குநர் ஆர். ராஜசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**நேரடி துவரை விதை நாற்றங்கால் ஆய்வு**

புதுக்கோட்டை வட்டாரத்தில் நேரடி துவரை விதை நாற்றங்காலை வேளாண்துறையினர் சனிக்கிழமை கள ஆய்வு செய்தனர்.

வயலில் நேடியாக துவரை விதை ஊன்றி பயிரிடுவதற்கு பதிலாக வேளாண் துறை அதிகாரிகளின் ஆலோசனைப்படி தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயல்படும் பயறு இயக்க திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை வட்டாரம், நெப்பியப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பா. புதுமைதாஸ் தனது வயலில் நாற்றங்கால் தயாரித்து 30 நாட்களில் பார் அமைத்து நடவு செய்ய உள்ளார்.

இம்முறையில் துவரை நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. இந்த ஒரு எக்டர் செயல் விளக்கத் திடலுக்கு ரூ. 7500 அரசு மானியம் வழங்குகிறது. இந்நிலையில், தற்போது நடவு செய்யும் வகையில் நன்கு வளர்ந்துள்ள நாற்றங்காலை புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் அறிவுறுத்தலின் படி துணை இயக்குநர் (மத்தியதிட்டம்) ஆக். சதானந்தம் கள ஆய்வு செய்து விவசாயிக்கு நடவு தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனைகளைத் தெரிவித்தார். இதில், புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன், வேளாண் அலுவலர்கள் லெ. அண்ணாமலை, ஆர். ஜெகதீஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**"இதுவரை 22,809 விலையில்லா ஆடுகள்**

தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில் இதுவரையில் ரூ. 16 கோடியே 19 லட்சம் மதிப்பிலான 22,809 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன என மாநில கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி.பூனாட்சி கூறினார்.

லால்குடி அருகேயுள்ள நகர் ஊராட்சியில் 45 பயனாளிகளுக்கு ரூ. 6 லட்சத்து 52 ஆயிரத்து 600 மதிப்பிலான விலையில்லா ஆடுகளை வழங்கி, அவர் மேலும் பேசியது:

திருச்சி மாவட்டத்தில் இதுவரையில் ரூ. 16 கோடியே 19 லட்சம் மதிப்பிலான 22,809 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

விழாவில் திருச்சி புறநகர் மாவட்டச் செயலரும் எம்பியுமான ரத்தினவேல், ஆட்சியர் ஜெயஸ்ரீமுரளிதரன், திருச்சி மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் டி. ராமு (பொறுப்பு), லால்குடி ஒன்றியச் செயலர் டி.என்.டி. நடேசன், லால்குடி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் நளாயினிநாகராஜன், பேரூராட்சித் தலைவர் சுதாராணிவிஜயமூர்த்தி, ஊராட்சித் தலைவர் யோகமலர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 10 இடங்களில் வாழை வணிக வளாகம் அமைக்க வலியுறுத்தல்

உபபொருள்கள் தயாரித்தல் போன்ற கட்டமைப்புகளுடன் கூடிய வாழை வணிக வளாகத்தை திருச்சி உள்பட 10இடங்களில் அமைக்க வேண்டும் என்று காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

ஆடை உற்பத்தியில் சிறந்து விளங்கும் கரூர் மாவட்டத்தில் வாழை உபபொருள்களைக் கொண்டு ஆடை தயாரித்தல் ஆலையை நிறுவ வேண்டும். உயர்ரக கலப்பின வாழையை கிருஷ்ணராயபுரம், தொட்டியம், முசிறி, குளித்தலை, திருச்சி போன்ற வாழை உற்பத்தி அதிகமுள்ள இடங்களுக்கு வழங்க வேண்டும்.

அரசுத் துறைகளின் நிர்வாக நலன்கருதி திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கம் மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும். மாயனூர் கதவணைத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் சென்று வரும் இருவழிப்பாலமாக கதவணைக் கட்டப்பட்டுள்ளது. ஆனால் தென்பகுதியில் கரூர்-திருச்சி நெடுஞ்சாலையுடனும், வடபகுதியில் திருச்சி-நாமக்கல் சாலையுடனும்

இணைக்கப்படவில்லை. இந்த இரு பகுதிகளிலும் சாலைகள் இணைக்கப்பட்டால் திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட மக்கள் சென்னைக்கு விரைவாக செல்லலாம்.

மணப்பாறை, மருங்காபுரி, ஸ்ரீரங்கம் வட்ட மக்கள் ஸ்ரீரங்கத்துக்கு விரைவாக வந்து செல்லும் வகையில் ஜீயபுரத்தில் காவிரியாற்றின் குறுக்கே நான்குவழிச் சாலை பாலம் அமைக்க வேண்டும். எண்ணெய்ப்பனை குலைக்கு குறைந்தபட்ச விலையாக டன்னுக்கு ரூ.7000 அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் பெருந்தலைவர் ஜி. கனகசபை தலைமை வகித்தார். துணைத் தலைவர்கள் டி. அரியநாதன், எஸ்.ஏ.சுகுமார், எஸ்.சிவராஜன் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் காப்பாளர்கள் தீட்சிதர் எஸ். பாலசுப்பிரமணியம், ஓய்வு பெற்ற பொறியாளர் என். நடராஜன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று கருத்துரையாற்றினர். சங்க செயல் தலைவர் மகாதானபுரம் வி.ராஜாராம் தீர்மானங்களை வாசித்தார்.கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பொருளாளர் ஏ.ஜெபமாலை வரவேற்றார். செயலர் பி. காந்திபித்தன் நன்றி கூறினார்.

**நவம்பர் 4 ல் ஆர்ப்பாட்டம்: விவசாயத் தொழிலாளர்கள் முடிவு**

பண்ருட்டி வட்டார வளர்ச்சி அலுவலரை கண்டித்து நவம்பர் 4-ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தச் சங்கத்தின் பண்ருட்டி ஒன்றியக் குழுக் கூட்டம் பண்ருட்டியில் சனிக்கிழமை நடைபெற்றது.

ஒன்றியத் தலைவர் எஸ்.கே.ஏழுமலை தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் வி.சேதுராஜன், ஒன்றியச் செயலர் ஏ.லாரன்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், கூட்டத்தில் ஊராட்சி துப்புரவு பணியாளர் நியமனத்தில் விதவை, கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்றோரை முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்க வேண்டும். தகுதி இல்லாதவர்களை பணி நியமனம் செய்யும் ஊராட்சி நிர்வாகத்தை கண்டிப்பது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பொதுமக்கள் கோரிக்கையை கேட்காமல் அலட்சியமாக நடந்துகொள்ளும் போக்கை கண்டிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்டவைகளை வலியுறுத்தி நவம்பர் 4-ஆம் தேதி பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு இழப்பீடு: விவசாயிகள் அமைச்சரிடம் வலியுறுத்தல்**

மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு இழப்பீடு கேட்டு தேரூர் பகுதி விவசாயிகள் அமைச்சரிடம் ஞாயிற்றுக்கிழமை மனு அளித்தனர்.

சுசீந்திரம் அருகே தேரூர் பகுதியில் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது. கன்னிப்பூவில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிர்கள் அறுவடை நேரத்தில் பெய்த மழையால் சேதமடைந்தன. சுமார் 150 ஏக்கரில் நெற்பயிர்கள் முழுமையாக தண்ணீரில் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களை பார்வையிட அமைச்சர் கே.டி. பச்சைமால் தேரூர் சென்றார். அங்கு பாதிப்படைந்த நெற்பயிர்களை அவர் பார்வையிட்டார். அப்போது தேரூர் விவசாயிகள் சங்கத் தலைவர் சண்முகம்பிள்ளை தலைமையில் விவசாயிகள் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு இழப்பீடு வழங்கக்கேட்டு, அவரிடம் மனு அளித்தனர். அமைச்சருடன் அண்ணா தொழிற்சங்க செயலர் காரவிளை செல்வன், மீனவர் அணி அமைப்பாளர் ஜஸ்டின், எம்.ஜி.ஆர்.மன்ற துணைச் செயலர் கிருஷ்ணபிள்ளை, வேளாண் இணை இயக்குநர் நாகமணி பிள்ளை, வேளாண் அலுவலர் முத்து, தேரூர் பேருராட்சித் தலைவர் வீரபுத்திர பிள்ளை, துணைத் தலைவர் அய்யப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.10.2013**

## குறைந்து வரும் மழை அளவு அதிருப்தியில் விவசாயிகள்

திண்டுக்கல் : மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்ய வேண்டிய மழை அளவு குறைந்து கொண்டே வருவது விவசாயிகளிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பெய்ய வேண்டிய மழை அளவு கடந்த 5 ஆண்டுகளில் பெருமளவில் குறைந்துள்ளது. அதிகபட்சமாக 2010 ல் 1,104.70 மி.மீ., மழை பெய்திருந்தது. 2011 ல் 100 மி.மீ., குறைந்து 1070.41 மி.மீ., வரை பெய்தது. 2012 ல் நேர்பாதியாக குறைந்து 519.47 மி.மீ., மட்டுமே பெய்தது.

இந்த ஆண்டு அக்டோபர் வரை 607.2 மி. மீ., மழை பெய்ய வேண்டும்.

ஆனால், இதுவரை 283.28 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. தொடர்ந்து மழை அளவு குறைந்து கொண்டே இருப்பது விவசாயிகள் மற்றும் வேளாண் துறையினர் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## விவசாய தொழிநுட்ப ஆலோசனைக்கூட்டம்

பழநி : பழநியில் அட்மா திட்டத்தில் விவசாய தொழிநுட்ப ஆலோசனைக் கூட்டம், உதவி இயக்குனர் சாந்தாமணி தலைமையில் நடந்தது.

இதில் வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும், மானியத்திட்டங்கள் பற்றியும், திருந்திய நெல் சாகுபடி , துவரை நாற்று நடவுமுறை, நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், அதற்குரிய மானியங்கள் குறித்து, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

தோட்டக்கலைத்துறை சார்பாக, சொட்டுநீர்பாசன மற்றும் துல்லிய பண்னை முறையில் காய்கறி சாகுபடி பற்றி அலுவலர் பழனிச்சாமியும், பட்டுவளர்ச்சியில்

மல்பரிவளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பது குறித்து ஆய்வாளர் நடராஜனும் விளக்கினர். ஏற்பாடுகளை அட்மா திட்ட மேலாளர் கோசல்நாத் குழுவினர் செய்திருந்தனர்.

### உர இருப்பு நிலவரம் தினமும் கண்காணிப்பு

தேனி:தமிழகம் முழுவதும் உர இருப்பு, தேவை குறித்த நிலவரம் தினமும் கண்காணிக்கப்பட்டு அதற்கேற்ப சப்ளை செய்யப்படுகிறது.
எதிர்பார்த்த அளவு மழை பெய்வதால், விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இதனால், உரங்களின் தேவை அதிகரித்துள்ளது.
அனைத்து தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளிலும் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. உரப்பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதில் அரசு கவனமாக உள்ளது. எனவே,தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் இருப்பு, தினமும் சப்ளையாகும் விவரம், தேவை குறித்த விவரங்கள் எஸ்.எம்.எஸ்., மூலம் தமிழ்நாடு கூட்டுறவு இணையம் (டான்பெட்) நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து உரங்களின் இருப்பு நிலவரம் கண்காணிக்கப்படுகிறது. தேவைப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு, உடனடியாக உரங்கள் சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### துவரை சாகுபடி விவசாயிக்கு எக்டேருக்கு ரூ 7.ஆயிரம் மானியம்

சிங்கம்புணரி ஒன்றியத்தில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிக்கு எக்டேருக்கு ரூ.7 ஆயிரம் மானியம் கிடைக்கும் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். நடவு, இடுபொருட்கள்,செயல்விளக்கம் அளிக்கப்படும். நீர்பாசன வசதியுள்ள விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு 6ஆயிரத்து 250 நாற்று வழங்கப் படும்.நூறு சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும்.ஐந்து மாதத்தில் பலன்தரும் கோ 6, துவரை நாற்று சிறுமருதூர் நாற்றங்காலில் தயார் நிலையில் உள்ளன.தேவையுள்ள விவசாயிகள் சிங்கம்புணரி வேளாண்மை வளர்ச்சி மையத்தை அணுகுமாறு உதவி இயக்குனர் சர்புதீன் அகமது தெரிவித்துள்ளார்

## ஆத்தூர் பகுதியில் போக்குகாட்டும் பருவமழை: விவசாயிகள் அதிர்ச்

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில் பருவமழை சீசன் சரிவர துவங்காமல் கண்ணாமூச்சி ஆடி வருவதால் விவசாயிகள் அதிர்ச்சி யடைந்துள்ளனர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை சீசன் முடிவடைந்த பின்னர் தற்போது பல பகுதிகளிலும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து தீவிரமாக பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஓரளவு மழை அவ்வப்போது பெய்து வருகிறது. இதற்கிடையில் ஆத்தூர், ஆறுமுகநேரி போன்ற விவசாயப்பகுதிகளிலும் மழை சீசன் அறிகுறியாக நான்கைந்து நாட்கள் மழை சாரலாகத்தூறியது.பல்வேறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்தாலும் இன்னமும் ஆத்தூர் பகுதிக்கு வருணபகவான் கருணை காட்டாததால், விவசாயிகளும், பொதுமக்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். மேலும் இருண்ட மேகமூட்டத்துடன் திருச்செந்தூரிலிருந்து சாகுபுரம் வரையிலும், தூத்துக்குடியி லிருந்து அகரம், முக்காணி வரையிலும், மற்ற சுற்றுப்பகுதி களிலும் பெய்யும் மழை ஆத்தூர் பகுதியை மட்டும் புறக்கணித்து விடுவதால் இந்தப்பருவ விவசாயம் என்ன ஆகுமோ? என்ற கேள்வி அனைவரின் மனதிலும் எழுந்துள்ளது. இனி தொடரும் மழையாவது ஆத்தூர் பகுதிக்கு கை கொடுத்தால் மட்டுமே விவசாயத்திற்கும், கால்நடைகளுக்கும் போதுமான நீராதாரம் கிடைக்கும் என்ற நிலை உள்ளதால், இப்பகுதியினர் நல்ல மழையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

## எள் விலை உயர்ந்ததால்ஏற்றுமதியாளர்களுக்கு இழப்பு

எள் வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை, கடந்த இருவாரங்களில், திடீரென்று இருமடங்கு உயர்ந்துள்ளது. இதனால், நடப்பு பருவத்தின் துவக்கத்தில், எள் ஏற்றுமதிக்கு குறைந்த விலையை குறிப்பிட்டு முன்பேர ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள், இழப்பை சந்தித்துள்ளனர்.நாட்டின் மொத்த எள் உற்பத்தியில், 80–90 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட நாடுகள், அதிக அளவில் இந்தியாவில் இருந்து எள்ளை இறக்குமதி செய்து கொள்கின்றன.

நாட்டின் எள் உற்பத்தி நன்கு இருக்கும் என்ற எதிர்பார்ப்பில், பல ஏற்றுமதியா-

ளர்கள், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அனுப்ப உள்ள எள்ளின் விலையை, சராசரி-யாக, 20 கிலோவிற்கு, 1,800 ரூபாய் என, நிர்ணயித்து, ஒப்பந்தம் செய்து கொண்-டுள்ளனர்.ஆனால், எள் அதிகம் விளையும், குஜராத் உள்ளிட்ட ஒரு சில மாநிலங்-களில், கடும் மழை காரணமாக, அதன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.இதனால், சந்தைகளுக்கு எள் வரத்து குறைந்து, அதன் விலை உயர்ந்துள்ளது. கடந்த இரு வாரங்களில், 20 கிலோ எள் விலை, 3,000–3,100 ரூபாயாக அதிகரித்துள்-ளது."இந்த விலை உயர்வை எதிர்பார்க்காத ஏற்றுமதியாளர்களுக்கு, இழப்பு ஏற்-பட்டுள்ளது" என, அகமதாபாத்தை சேர்ந்த விளைபொருள் வல்லுனர் பிரன் வக்கீல் தெரிவித்தார்.

சந்தையில் அதிக விலைக்கு எள் வாங்கி, ஏற்கனவே ஒப்புக் கொண்ட குறைந்த விலையில், ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலையில் ஏற்றுமதியாளர்கள் உள்ளனர். இழப்பை சந்திக்க அஞ்சி, ஒப்பந்தப்படி, எள்ளை ஏற்றுமதி செய்யத் தவறுவோரின் மதிப்பு, சர்வதேச சந்தையில் சீர்குலையும் என, அவர் மேலும் கூறினார்.வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில், எள் விலை தொடர்ந்து உச்சத்தில் இருக்கும் பட்-சத்தில், ஏற்றுமதியாளர்களுக்கு பெருத்த இழப்பு ஏற்படும்.இது குறித்து, குஜ-ராத்தை சேர்ந்த எள் ஏற்றுமதியாளர் ஒருவர் கூறியதாவது:லாபமோ, இழப்போ, ஒப்பந்தப்படி, நாங்கள் எள்ளை ஏற்றுமதி செய்வோம். விலையை மறுபரிசீலனை செய்வது குறித்த பேச்சுக்கே இடமில்லை. வர்த்தகத்தில் இதெல்லாம் சகஜம் தான். இவ்வாறு, அவர் கூறினார்.– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

### ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு 19,500 டன் உரங்கள் விற்பனை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதால், 26 ஆயிரத்து, 400 ஏக்கரில், விவசாயிகள் நெல் பயிரிட்டுள்ளனர். கடந்த, இரண்டு மாதத்தில் யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., என, 19 ஆயிரத்து, 500 டன் உரங்கள், விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றின் கீழ்பவானி வாய்க்கால், தடப்பள்ளி,

அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மூலம், 3 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைகின்றனர்.

நெல், கரும்பு, மஞ்சள், வாழை, நிலக்கடலை, எள் உள்ளிட்ட தானியங்களை விவசாயிகள், தண்ணீர் திறப்புக்கு ஏற்ப சாகுபடி செய்கின்றனர். கடந்தாண்டு, ஒன்றரை ஆண்டுகளாக மழையின்றி, அணைகள் வறண்டு போனதால், பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்காமல், பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டது. நடப்பாண்டு பருவமழை முன்கூட்டியே துவங்கியதால், அணைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தும், மாவட்டத்தில் அடிக்கடி மழை பெய்வதால், விவசாயிகள் சாகுபடியை துவக்கினர். கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தண்ணீர் திறக்கப்பட்டு, இரண்டு மாதங்கள் ஆன நிலையில், மாவட்டத்தில், 26 ஆயிரத்து, 400 எக்டேரில் நெல் பயிரிட்டுள்ளனர்.

அதே சமயம், 4,500 டன் பொட்டாஷ், 9,000 டன் யூரியா, 6,000 டன் டி.ஏ.பி., உரங்களை, கூட்டுறவு சொசைட்டிகள் மற்றும், உரக்கடைகள் மூலம், விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது. வேளாண் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம், 2,600 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள், 1,600 டன் டி.ஏ.பி., 300 டன் வெள்ளை பொட்டாஷ், 75 டன் ஸ்சிங் சல்பேட் ஆகியவற்றை இருப்பில் வைத்துள்ளனர்.

ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கிட, டேன்பிட் மூலம் கலப்பின உரங்கள், 2,600 டன் இறக்குமதி செய்யவுள்ளனர். தற்போது, 1,300 டன் யூரியா வரவழைக்கப்பட்டு, கூட்டுறவு சொசைட்டிகளில் ஸ்டாக் வைத்துள்ளதாக, மண்டல இணை பதிவாளர் ராமதாஸ் தெரிவித்தார்.

## காய் விலை குறைவால் மக்கள் மகிழ்ச்சி

ஈரோடு: வெங்காயம், தக்காளி விலை உச்சத்தில் இருந்தபோதும், ஒரு வாரத்தில் கத்தரி, வெண்டை, புடலை, பீர்க்கன், மிளகாய் உட்பட சில காய்கறிகள் விலை கிடுகிடுவென இறங்கி உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த, பத்து நாட்களாக மழை பெய்து வரும் நிலையில், தக்காளி விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. அதேசமயம் காய்கறிகளின் விலை எதிர்பாராத அளவுக்கு குறைந்துள்ளது.

ஏற்கனவே, காய்கறிகள் விலை குறைந்த நிலையில், வெளி மார்க்கெட்டின் விலையை விட, உழவர் சந்தைகளில் காய்கறிகள் விலை, 15 சதவீதம் குறைத்து விற்கப்பட்டது, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

நேற்று உழவர் சந்தையில் காய்கறிகளின் விலை:

தக்காளி, 36 ரூபாய், கடந்த சில நாட்களுக்கு முன், 28 ரூபாய்க்கு விற்கப்பட்ட கத்தரி தற்போது, 16 ரூபாயாக விலை குறைந்துள்ளது.

வெண்டைக்காய், 10, புடலை, 13, பீர்க்கன், 17, பாகற்காய், 10, சுரைக்காய் (சிறியது), 5, சாம்பல் பூசணி மற்றும் சர்க்கரை பூசணி, 15, கொத்தவரை, 17, முள்ளங்கி, 17 (சிவப்பு) வெள்ளை முள்ளங்கி, 20, பெரிய வெங்காயம், 60, சின்ன வெங்காயம், 65, சேனை கிழங்கு, 20, மரவெள்ளி, பீட்ரூட், 30, நூல்கோல், 29, பீன்ஸ், 28, முட்டை கோஸ், 20, சவ்சவ், 20, பழவகைகளில் (கிலோ) மாதுளை, 140, ஆப்பிள், 110, கருப்பு திராட்சை, 35, பன்னீர் திராட்சை, 50, பூவன் வாழைப்பழம், 24 (கிலோ), ரஸ்தாளி, 32, தேன்வாழை, 26, செவ்வாழை, 35, மொந்தன், 24, பச்சைநாடான், 25, மோரீஸ், 24, கீரை வகையில் மனத்தக்காளி கட்டு, 5, அரைக்கீரை, பண்ணை, பொன்னாங்கண்ணி, சிறுகீரை, தொய்க்கீரை போன்றவை கட்டு ஒன்றுக்கு, 3.50 ரூபாய், கொத்தமல்லி, 5, புதினா, 4, எழுமிச்சை (ஒரு பழம்), 4 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

ஆனால், நாட்டுத்தக்காளி, பெங்களூரு தக்காளி, 36 ரூபாயில் இருந்து, 38 வரை விற்கின்றனர். மழை காரணமாக, கடந்த ஒரு வாரமாக தக்காளி விலை உயர்ந்து கொண்டே போகிறது. சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் போன்றவை, கடந்த சில மாதங்களாகவே உச்சத்தில் உள்ளது.

உள்ளூரில் உற்பத்தி குறைவாகவும், வெளி மாநிலத்தை நம்பி இருப்பதாலும்,

வெளி மாநிலத்தில் விலை நிர்ணயம் செய்வதால், குறைய வாய்ப்பில்லை, என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் சுண்ணாம்பு தெளித்து கட்டுப்படுத்த முயற்சி

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில், வாழையில் இலைப்புள்ளி நோயை, சுண்ணாம்பு தெளித்து விவசாயிகள் கட்டுப்படுத்தி வருகின்றனர்.
கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் ஆகிய பாசன பகுதியில், பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை, மஞ்சள், கரும்பு பயிரிடப்படுகிறது. மஞ்சள் மற்றும் கரும்பு விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாக வில்லை. ஒரு முறை வாழை சாகுபடிசெய்தால், இரண்டு முறை வரை அறுவடை செய்யலாம். இதனால், வாழை பயிரிடும் விவசாயிகள், தற்போது அதிகரித்து வருகின்றனர். அய்யம்பாளையம், ஒத்தகுதிரை, கவுந்தபாடி, ஆப்பக்கூடல், நாதிபாளையம், நாகதேவம்பாளையம், அத்தாணி, டி.என்.பாளையம், குருமந்தூர், சிறுவலூர், கெட்டிசேவியூர் உள்ளிட்ட பகுதிகளில், 1,600 எக்டேரில் வாழை பயிரிடப்படுகிறது. சென்ற இரு ஆண்டுகளாக வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்கம் அதிகரித்து வருவதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
தோட்டக்கலை துறையினர், பல்வேறு வழிமுறை தெரிவித்தாலும், நோயை கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கோபி சுற்று வட்டாரத்தில் புதிதாக நடவு செய்து, வளர்ச்சியடைந்து வரும் வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. வாழையின் வேர்பகுதியில், கிளிஞ்சல் சுண்ணாம்பை கரைத்து தெளித்து வருகின்றனர். இதனால், வாழையின் இலைப்புள்ளி நோய் கட்டுப்படுவதுடன், மகசூல் அதிகரித்துள்ளது.
வாழை விவசாயிகள் கூறியதாவது: வாழை பயிரிடுவதில் ஒரு ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. உரங்களின் விலை

பல மடங்காகவும், விவசாய கூலி ஆட்களின் கூலி, இரு மடங்காக உயர்ந்துள்ளது. ஆனால், விவசாயிகள், உற்பத்தி செய்யும் விளை பொருட்களின் விலை மட்டும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

சென்ற ஆண்டில், வாழையில் ஏற்பட்ட இலைப்புள்ளி நோய் தாக்கத்தால், வாழை சாகுபடி குறைந்துள்ளது. மஞ்சள் விலை வீழ்ச்சி போன்ற காரணத்தால், வாழை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. நடப்பாண்டும் வாழையில் இலைப்புள்ளி நோய் பரவி வருகிறது. கோபி சுற்று வட்டாரத்தில், 500 எக்டேரில், நோய் பரவி உள்ளது. உற்பத்தி செலவு பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், நோய் தாக்கத்தால் விவசாயிகளுக்கு பெரிய நஷ்டத்தையும் ஏற்படுத்தியது. வாழையின் வேர் பகுதியில் கிளிஞ்சல் சுண்ணாம்பை கரைத்து, வேர் பகுதியில் தெளித்தால், நோய் கட்டுக்குள் வருகிறது. மகசூல் அதிகரிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### சாகுபடிக்கு மானியம் பயன் பெற அழைப்பு

கரூர்: திருந்திய நெல் சாகுபடியில் ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் மானியத்தில் இடுபொருள் வழங்கப்படுவதாக கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு, 748.4 மி.மீ. ஆகும். ஆனால் நடப்பாண்டில், கடந்த, 23ம் தேதி வரை, 366.2 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இருப்பினும், இம்மழையைக் கொண்டு மானாவரி பயிர்களான, சோளம், கம்பு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள், 7,352 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் முதல் வாரத்தில் சம்பா பருவ நெல் நடவுப்பணிகள் முடியும். இதில், 9,500 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி நடைபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருந்து, சான்று பெற்ற நெல் விதைகள் வினியோகிக்கப்படுகிறது.

திருந்திய நெல் சாகுபடி முறையை ஊக்குவிக்க ஹெக்டேருக்கு, 3000 ரூபாய் மானியத்தில் இடுபொருள்கள் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உரக்கடைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில்,

யூரியா, 991 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 446 மெ.டன், பொட்டாஷ், 573 மெ.டன், கலப்பு உரங்கள், 1,233 மெ.டன் என, மொத்தம், 3,243 மெ.டன் உரங்கள் கையிருப்பில் உள்ளது.

## இலவச ஆடு, மாடுகளுக்கு தீவனப்பயிர் உற்பத்தி அமோகம் : விவசாயிகளுக்கு 3.5 லட்சம் கன்றுகள் வினியோகம்

படப்பை : விலையில்லா ஆடு, மாடுகளை வளர்க்க வசதியாக, தீவனப்பயிர் கன்றுகளை, அரசு பண்ணைகளில் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கும் பணி, தீவிரமாக நடந்து வருகிறது.

அரசு கால்நடை தீவன உற்பத்திப் பண்ணை, காஞ்சிபுரம் மாவட்டம், படப்பையில் உள்ளது. விவசாயிகளுக்கு, அரசு வழங்கிய விலையில்லா ஆடு, மாடுகளுக்குத் தீவனம் கொடுக்கும் வகையில், தீவனப்பயிர் கன்றுகளை உற்பத்தி செய்து, இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் துவங்கப்பட்டு உள்ளது.

5 மாவட்டங்களுக்கு

இந்தத் திட்டத்தில், படப்பை பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் கால்நடைத் தீவனக் கன்றுகள், காஞ்சிபுரம் உள்ளிட்ட, ஐந்து மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, இலவசமாக வழங்கப்படுகிறது.

வேலிமசால், குதிரைமசால், காராமணி, அகத்திக்கீரை போன்ற தீவனப்பயிர் கன்றுகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டு, 5 லட்சம் தீவனக் கன்றுகளை உற்பத்தி செய்ய, 15 லட்சம் ரூபாயை, அரசு ஒதுக்கியது. இதில், இதுவரை, 3.40 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்து, மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளன.

இவை, அந்தந்த மாவட்டங்களில், தாலுகா வாரியாக, வட்டார கால்நடை மருத்துவர்களால், விலையில்லா ஆடு, மாடுகள் பெற்ற விவசாயிகளுக்கு, இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இந்தக் கன்றுகளை, தங்கள் நிலத்தில் வளர்த்து, தீவன உற்பத்தி

செய்து, ஆடு, மாடுகளை சிறப்பாக வளர்க்க வேண்டும் என, கால்நடைத் துறை அதிகாரிகள், அறிவுரை வழங்குகின்றனர்.

படப்பை தீவனக் கன்று உற்பத்தி பண்ணையில், மாடுகளுக்கு, புல் மற்றும் அகத்திக்கீரை போன்றவை நேரடியாகவும் விற்கப்படுகிறது. 20 கிலோ எடையுள்ள புல் கட்டு, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சொந்தமாக நிலம் வைத்துள்ள விவசாயிகளை, தீவனப்பயிர் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையில், விதையும் வழங்கப்படுகிறது.

கடந்த 6 மாதங்களில்...

இது குறித்து, படப்பை தீவனக் கன்று உற்பத்தி பண்ணை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஒரு நாளைக்கு, 400 கன்றுகளை விதையிட்டு, பாக்கெட்டுகளில் தயார் செய்கிறோம். தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களும், இந்தப் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளனர். இதனால், உற்பத்தி வேகமாக நடந்து வருகிறது.

இங்கிருந்து, கடந்த ஆறு மாதங்களில் மட்டும், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு, தலா, 60 ஆயிரம் கன்றுகளும், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு தலா, 80 ஆயிரம் கன்றுகளும் அனுப்பப்பட்டு உள்ளன. இவை, அந்தந்த மாவட்ட கால்நடைத் துறை அதிகாரிகளால், விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## மழைக்கு முந்தைய பராமரிப்பில் மெத்தனம்

கும்மிடிப்பூண்டி : மின் பாதையில், மழைக்கு முந்தைய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததால், மழைக் காலங்களில், மின் வெட்டு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

கும்மிடிப்பூண்டி அருகே, எளாவூர் மின் அலுவலகத்தின் பராமரிப்பில், எளாவூர், சாலை, மெதிப்பாளையம், சுண்ணாம்புக்குளம், ஓபசமுத்திரம், காயலார்மேடு, நாகராஜகண்டிகை உள்ளிட்ட, 40க்கும் மேற்பட்ட கிராம பகுதிகள் உள்ளன.

அந்த பகுதிகளில் உள்ள, பெரும்பாலான மின் பாதையின் அருகே, செடி, கொடிகள், மரங்கள் வளர்ந்துள்ளன. மழைக்காலங்களில் ஈரப்பதமான செடி, கொடிகள், மரக்கிளைகள் மின்கம்பிகளை உரசும் பட்சத்தில் மின் வெட்டு ஏற்படும். அதற்காக, மழைக்கு முந்தைய பராமரிப்பு பணிகளை, மின் துறையினர் மேற்கொள்வது வழக்கம். அந்த பணிகளின் போது, மின் கம்பங்களில் படரும் செடி கொடிகள், உரசும் நிலையில் உள்ள மரக்கிளைகள் அப்புறப்படுத்தப்படும். எளாவூர் இளைநிலை பொறியாளர் மின் அலுவலகத்தினர் சார்பில், மேற்கண்ட கிராம பகுதிகளில் மழைக்கு முந்தைய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவில்லை. இதனால், தற்போது பெய்து வரும் தொடர் மழையால், அடிக்கடி மின் வெட்டு ஏற்படுகிறது என, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.மேலும் தாமதிக்காமல், மின் பாதையில் படரும் செடி கொடிகள் மற்றும் மரக்கிளைகளை அகற்ற வேண்டும் என, அப்பகுதி மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர்.

## மயிலம் பகுதியில் சம்பா நடவு பணி தீவிரம் : வெளியூர் தொழிலாளர்கள் வரவழைப்பு

விக்கிரவாண்டி : மயிலம் ஒன்றியம் பேரணி, பெரியதச்சூர் பகுதியில் சம்பா நடவு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய வேலைக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் கள்ளக்குறிச்சி உள்ளிட்ட வெளியூரில் இருந்து கூலி தொழிலாளர்கள் வரவழைக்கப் பட்டுள்ளனர்.பருவ மழைகடந்த சில தினங்களாக பெய்து வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இத்துடன் நீர் நிலைகளில் வரத்து துவங்கியுள்ளதால், சம்பா நடவு பணியில் விவசாயிகள் கவனம் செலுத்தி நடவு பணிகளை துவக்கியுள்ளனர்.விழுப்புரம் அடுத்த விக்கிரவாண்டி, பேரணி, பெரியதச்சூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் ஏற்கனவே நடவு செய்ய நெல் நாற்று விட்டு தயாராக வைத்திருந்திருந்தனர். விவசாயிகள் தற்போது தீவிரமாக நடவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.ஆட்கள் பற்றாக்குறைபெரியதச்சூர் மற்றும் பேரணி ஆகிய கிராம பகுதிகளில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி நூறு நாள் வேலை திட்ட பணிகள் நடந்து வருவதால், நடவு பணிக்கு ஆட்கள்

பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள பெரும் விவசாயிகள் பக்கத்து கிராமமான நெடி மோழியனூர், செண்டியம்பாக்கம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய பகுதியிலிருந்து நடவு செய்ய பெண்களை வரவழைத்து, நடவு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

நாற்று எடுக்கும் பணிக்காக ஆண்களுக்கு 300 ரூபாய், பெண்களுக்கு நடவு பணிக்காக 70 ரூபாய் தினக்கூலியாக வழங்கப்படுகிறது. இதனால் பெண் தொழிலாளர்கள் நடவு பணிக்கு வராமல் தேசிய வேலை உறுதி திட்ட பணிகளுக்கு செல்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

நாட்டின் அடிப்படை தேவையான உணவிற்காக நெல் நடவு செய்யும் போது, கிராமத்தில் தேசிய வேலை உறுதி திட்ட பணிகள் அதிகளவில் நடந்து வருகின்றது. கிராமத்திலுள்ள பெண்கள் எளிமையான வேலை செய்து, சம்பளம் பெறும் அரசு திட்ட பணிகளுக்கு செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

வெளியூர் தொழிலாளர்கள்

தேசிய ஊரக வேலை திட்டப் பணிகளுக்கு கிராமப்புற தொழிலாளர்கள் சென்றுவிடுவதால் விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. கள்ளக்குறிச்சி பகுதியில் தற்போது தேசிய வேலை உறுதி திட்ட பணிகள் நடைபெறாத காரணங்களால், அப்பகுதியிலுள்ள பெண்களை விக்கிரவாண்டி பகுதிக்கு விவசாய வேலைக்கு வரவழைத்துள்ளனர்.

இந்த தொழிலாளர்களுக்கு உணவு, தங்க இடவசதி ஏற்படுத்தி கொடுத்து, நடவு செய்யும் பணியில் ஈடுபட விவசாயிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

விவசாய சாகுபடி பணிகள் முடிந்த பிறகு, ஊரக வேலை வாய்ப்பு திட்டப் பணிகளை செயல்படுத்தினால், கிராமப் புறங்களில் விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்க முடியும். அத்துடன் ஆண்டுக்கு நூறு நாள் வேலை என்பதைக் காட்டிலும் அதிகளவில் கிராமப் புற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வழி ஏற்படும்.

## சங்கராபுரத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை :வேலை உறுதி திட்டம் முறைப்படுத்தப்படுமா?

சங்கராபுரம் : விவசாய பணிகள் மிகுந்த மாதங்களில் ஊரக வேலை உறுதி திட்டத்தை செயல்படுத்துவதால் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் விவசாய தொழில் நலிவடைந்து வருவதை தடுக்க, வேலை உறுதித் திட்டத்தை முறைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாடு முழுவதும் கிராமங்களில் வேலைவாய்ப்பு இல்லாமல் வறுமையில் வாடும் மக்கள் வேலை தேடி நகரங்களில் குடியேறுவதை தடுக்கவும், கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் மத்திய அரசு தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை கொண்டு வந்தது.

இத்திட்டத்தில் கிராமத்தில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலைக்கான உத்தரவாதம். 18 வயது நிரம்பியவர் வேலை செய்ய விருப்பம் தெரிவித்தால், அவரும் வேலை செய்யலாம். ஆண், பெண் இருவருக்கும் சமமான கூலி. வேலையின் போது காயமடைந்தால் இலவச சிகிச்சை, குறைந்தபட்ச கூலித் தொகை நாள் ஒன்றுக்கு 150 ரூபாய் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் பல லட்ச ருபாயை அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இந்த நிதியில் இயந்திரங்களை பயன்படுத்தாமல் கிராமப்புற தொழிலாளர்களைக் கொண்டு ஏரி, குளம், வரத்து வாய்க்கால், பாசன வாய்க்கால் சீரமைப்பது, புதிய குளம் வெட்டுவது போன்ற பணிகளை செய்து வருகின்றனர்.

சங்கராபுரம் பகுதியில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்தது. இதனால் விவசாய பணிகள் சரியாக நடக்கவில்லை.

கடந்த ஒரு மாதம் முன்பு சங்கராபுரம் பகுதியில் 4 நாட்கள் பெய்த தொடர் மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஒரு சில ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளதால், வறண்டு கிடந்த விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதனால் விவசாயிகள் தற்போது விவசாய பணிகளை துவங்கி உள்ளனர். நவீன விவசாயம் வந்திருந்தாலும், நெல் நடவு செய்வது, களை எடுப்பது, மணிலா எடுப்பது, கரும்புநடவு செய்வது, கரும்பு வெட்டுவது போன்ற பணிகளுக்கு ஆட்கள் அதிகளவில் தேவைப்படுகின்றனர்.

சங்கராபுரம் பகுதியில் உர தட்டுப்பாடு, மின் தடை, தண்ணீர் பஞ்சம், விளை

பொருட்களுக்கு போதிய விலையின்மை என விவசாயமே பெரும் பிரச்னையாக உள்ளது. இந்நிலையில் கூலி ஆட்கள் பிரச்னையும் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது.

வசதி படைத்த விவசாயிகள் வெளி ஊர்களிலிருந்து போக்குவரத்து செல விற்கு பணம் கொடுத்து ஆட்களை கொண்டு வந்து சமாளிக்கின்றனர். ஆனால் சிறு விவசாயிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் குறைந்த நிலம் உள்ளவர்கள் விவசாயத்தை விட்டுவிட்டு மற்ற வேலைகளுக்கு செல்ல துவங்கி உள்ளனர். இந்த நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் விவசாயம் நசிந்து விவசாய விளைபொருட்கள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும்.

ஏரி, குளம் வாய்க்கால்களில் தண்ணீர் இருக்கும் போது ஊரக வேலை உறுதி திட்ட பணிகளை செய்வதால் முழுமையான பலன் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. வேலை உறுதி திட்டத்தை விவசாய பணிகள் முடியும் வரை நிறுத்தி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலம் விவசாய தொழில் பாதுகாக்கப்படுவதுடன், கிராம மக்களுக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் முழுமையான பலன் கிடைக்கும்.

## தமிழ்நாடு விவசாயிகள் சங்க செஞ்சி வட்டக்குழு கூட்டம்

செஞ்சி : தமிழ்நாடு விவசாயிகள் சங்க செஞ்சி வட்டக்குழு சிறப்பு கூட்டம் செஞ்சியில் நடந்தது.

வட்ட செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் குண்டு ரெட்டியார், வட்ட குழு வசுபாலன், அந்தாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் சங்கர் வரவேற்றார்.

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ., ராமமூர்த்தி, விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் முகமது அலி மாவட்ட செயலாளர் சுப் பிரமணியன் சிறப்புரை நிகழ்த்தினர். சி.ஐ.டி.யூ., கோவிந்தசாமி, மா.கம்யூ., வட்டக்குழு முருகன் ஆகியோர் கலந்து கொண் டனர். பொருளாளர் வீராசாமி நன்றி கூறினார்.

இதில், கடன் தொல்லை தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளை காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் புதிய கொள்கைகளை உருவாக்கி நடைமுறை படுத்த வேண்டும். பாசன நீர் மற்றும் குடிநீரை விற்பனை பொருளாக்கி மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய நீர் கொள்கையை கைவிட

வேண்டும். கரும்பு டன்னுக்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

## விதை கிராம திட்டத்தில் ரூ.61 லட்சம் மானியத்தில் விதை வினியோகம்

தர்மபுரி: விதை கிராம திட்டத்தில், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு, 61 லட்ச ரூபாய் மானிய விலையில் விதை வினியோகம் மற்றும் விதை உற்பத்திக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது:

தர்மபுரி மாவட்டத்தில் நெல், சிறுதானியங்கள், பயிறு வகையான துவரை, உளுந்து, காராமணி, பாசி பயிறு கொண்டை கடலை, கொள்ளு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களான கடலை போன்றவை பயிரிடப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான நெல், சிறுதானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துகளின் விதைகள், 50 சதவீத மானியத்தில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு, 6 லட்ச ரூபாய் மதிப்பில், 60 டன் நெல் விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.மேலும், 6 லட்ச ரூபாய் மதிப்பில், 30 டன் சிறுதானிய பயிர் விதைகள், 28 லட்ச ரூபாய் மதிப்பில், 70 டன் பயிறு வகை விதைகள், 21 லட்ச ரூபாய் மதிப்பில், 70 டன் எண்ணெய் வித்து பயிர்களின் விதைகள், என மொத்தம், 61 லட்ச ரூபாய் மதிப்பில், 230 டன் விதைகள் வழங்க மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு விதைகள், விவசாயிகளுக்கு வினியோகிக்கபட்டு வருகிறது.

மாவட்டத்தில் உள்ள, 8 வட்டாரங்களில் உள்ள விரிவாக்க மையங்களிலும், மற்றும் துணை வேளாண்மை மையங்களிலும் விவசாயிகள் மானிய விலையில் விதைகளை பெற்றுக்கொள்ளலாம்.

தற்போது கொள்ளு, கொண்டைக்கடலைக்கு சீசன் துவங்கியுள்ளதால் இவ்விதைகளை மானியத்தில் பெற்று பயன்பெறலாம். மேலும் நிலக்கடலை

விதைக்க மானியத்தில் பெற்று பயன்பெறலாம்.

மேலும் விவசாயிகளே விதைகளை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு விதை உற்பத்தி சாகுபடி பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக ஒரு பயிற்சிக்கு, 100 பேர் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி பயிர் சாகுபடி ஒருமுறை, வளர்ச்சி பருவத்தில் ஒருமுறை, அறுவடை மற்றும் அறுவடை பின்பு என, 3 கட்டமாக வழங்கப்படுகிறது. எனவே விதை உற்பத்தி செய்யும் பயிற்சியை பெற்று விவசாயிகள் பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.10.2013**

**வெங்காயத்தை தொடர்ந்து தேங்காய் விலை கிடுகிடு உயர்வு**



நெல்லை : வெங்காயத்தை தொடர்ந்து தேங்காய் விலையும் உயர்ந்து வருகிறது. கிலோ ரூ.28ஆக உயர்ந்துள்ளதால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிப்படைந்து உள்ளனர்.

பல்லாரி வெங்காயம் மற்றும் சிறிய வெங்காயம் விலை கடந்த சில மாதங்களாக உச்சத்தில் உள்ளது. இடையில் சில தினங்கள் கிலோ ரூ.50 வரை குறைந்த வெங்காயம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. தற்போது பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.70, சின்ன வெங்காயம் ரூ.85க்கு விற்பனையாகிறது. இதனால் பெரும்பாலான குடும்பத்தினர் வெங்காயம் பயன்படுத்துவதை குறைத்துள்ளனர்.

இந்த நிலையில் தேங்காய் விலையும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த 10 தினங்களுக்கு முன் கிலோ ரூ.20ஆக இருந்த தேங்காய் விலை ரூ.24, ரூ.26 ஆக உயர்ந்து வந்தது. நேற்று கிலோ ரூ.28க்கு விற்பனையானது. இதனால் சிறிய தேங்காய் ரூ.12க்கு குறையாமல் விற்கப்பட்டது.

இது குறித்து தேங்காய் வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த சில மாதங்களாக

நீடித்த வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி போதிய அளவு இல்லை. தென்காசி, திசையன்விளை, குமரி மாவட்டங்களில் இருந்து வரும் தேங்காய்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.  தேங்காய் விலை அடுத்த சில தினங்களுக்கு ஏறுமுகமாகவே இருக்கும்' என்றனர். அன்றாட சமையலுக்கு தேவைப்படும் தேங்காய் விலை உச்சத்திற்கு சென்றுள்ளதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

**ரப்பர் விலை சரிவு விவசாயிகள் கவலை**



கோட்டயம் : சமீபகாலமாக வெளிநாடுகளில் இருந்து ரப்பர் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு ரப்பர் தேவையில், கேரளாதான் 80 சதவீதத்தை பூர்த்தி செய்கிறது. இறக்குமதி ரப்பர் வருகையில், உள்ளூர் ரப்பர் விலை, வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு மாதத்துக்கு முன்பு வரை கூட ஒரு குவிண்டால் ரூ.18,113க்கு விற்பனையான நிலையில், கடந்த வாரத்தில் இது ரூ.15,900 ஆக சரிந்துள்ளது. தற்போதுள்ள அளவில் இறக்குமதி தொடர்ந்தால், விலை மேலும் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

.

ரப்பர் விலை உச்சத்தில் இருந்தபோது தொழிலாளர்களுக்கான கூலி உயர்த்தப்பட்டது. தற்போது விலை வீழ்ந்துள்ள நிலையில், அதே அளவு கூலி, இடுபொருட்களுக்கு செலவிட வேண்டியுள்ளதால், உற்பத்தி விலை கூட கிடைக்கவில்லை என்று கேரள விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர். இதனால் இறக்குமதி ரப்பருக்கு சுங்க வரியை அதிகரிக்க வேண்டும் என்று அவர்கள் கோ ரிக்கை விடுத்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 28.10.2013

### சம்பா நெற்பயிர் பராமரிப்பு பணி கூலி ஆட்கள் பற்றாக்குறை: விவசாயிகள் பரிதவிப்பு



விருத்தாசலம்,

விருத்தாசலம் பகுதியில் விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் சம்பா நெற்பயிரில் பராமரிப்பு பணிகளை சரிவர மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

**<u>களைகள்</u>**

விருத்தாசலம், கம்மாபுரம், வேப்பூர், பெண்ணாடம் மற்றும் அதனை சுற்றியுள்ள 300–க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் சம்பா நெற்பயிரினை பயிர் செய்துள்ளனர். தற்போது பருவமழை தொடங்கியதை தொடர்ந்து சம்பா நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து வருகின்றன. இதனை தொடர்ந்து விவசாயிகள் சம்பா நெற்பயிரினை பராமரிக்கும் பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.இந்த நிலையில் விருத்தாசலம் பகுதியில் கூலி ஆட்கள்

பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் நெற்பயிரிகளுக்கு இடையே வளர்ந்துள்ள களைகளை சரிவர அகற்றமுடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இது குறித்து செட்டாவனம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது.

கடந்த வருடம் தண்ணீர் பற்றாக்குறையால் நெற்பயிர்கள் காய்ந்து கருகியது. இதனால் எங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

<u>நம்பிக்கை</u>

எனினும் நடப்பாண்டில் அத்தகையை சூழ்நிலை நடைபெறாது என்கிற நம்பிக்கையில், தற்போதும் நெற்பயிரினை பயிர் செய்துள்ளோம். வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளதால் பயிர்களும் நல்ல முறையில் வளர்ந்து வருகின்றன. இந்த நிலையில் விவசாய கூலி தொழிலாளர்கள் பெரும்பாலும் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்யவே அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த காலங்களை விட தற்போது குறைந்த அளவில் மட்டுமே கூலி தொழிலாளர்கள் விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நெற்பயிர்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதில் எங்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாய

கூலியும் அதிகரித்து வருவதால், வேறுவழியின்றி விவசாயிகள் பலரும் நெற்பயிரில் பராமரிப்பு பணிகளை தங்களது குடும்ப உறுப்பினர்களை கொண்டு செயல்படுத்தி வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்

**புதுக்கோட்டை மாவட்ட பகுதியில் இறால் விலை வீழ்ச்சி**



கோட்டைப்பட்டினம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் மீனவர்கள் பிடித்து வரும் இறால் விலை வீழ்ச்சியடைந்ததால், மீனவர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

இறால் விலை வீழ்ச்சி

புதுக்கோட்டை மாவட் டத்தில் கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாபட்டினம் ஆகிய பகுதிகளில் மீன் பிடி துறைமுகம் உள்ளது. இங்கிருந்து சுமார் 750-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றனர். அவர்கள் பிடித்து வரும் மீன்கள், நண்டு, இறால் போன்றவை கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் அவை பதப்படுத்தப் பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த நிலையில் ராமேஸ்வரம், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் இறால் ஒரு கிலோ ரூ.750 முதல் ரூ.1,000 வரை விற்கிறது. ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் ஒரு கிலோ இறால் ரூ.450 முதல் ரூ.600 வரை மட்டும் விலை போகிறது. இதனால் மீனவர்கள் வேதனையடைந்துள்ளனர்.

விலை நிர்ணயம்

இது குறித்து ஒரு மீனவர் கூறுகையில், நாங்கள் கடலில் எங்கள் உயிரை பணையம் வைத்து பிடித்து வரும் மீன், இறால், நண்டு போன்றவைகளுக்கு தனியார் கம்பெனியே விலை நிர்ணயிக்கிறது. இதனால் அவர்கள் எங்களிடம் குறைந்த விலைக்கு பொருட்களை வாங்கி செல்கின்றனர். மீனவர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு மீனவர்கள் விலை நிர்ணயிக்கும் நிலை உண்டானால்தான், இதற்கு தீர்வு காண முடியும், என்றார்.

**உபரி நிலத்தில் பட்டா பெற்றவர்கள் பயிர் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்**



தாராபுரம்,

உபரி நிலத்தில் பட்டா பெற்றவர்கள், அந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாய தொழிலாளர் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மாநாடு**

குண்டடம் ஊராட்சி ஒன்றியம் குங்காருபாளையம் விவசாய தொழிலாளர் சங்க மாநாடு தாராபுரம் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு பாசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மாநாட்டை விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் ரகுபதி தொடங்கி வைத்தார்.

இதில் விவசாய தொழிலாளர் சங்க துணை தலைவர் தர்மன், நதியா, முருகன், மணிகண்டன், அண்ணாதுரை, தண்டபாணி, முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் குண்டடம் ஒன்றியத்தில் உள்ள உபரி நிலத்தில் அரசு மூலம் பட்டா பெற்ற பயனாளிகள் அந்த நிலத்தில் சாகுபடி செய்ய நில சீர்திருத்தத் துறை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**புதியநிர்வாகிகள்**

அதைத்தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில், குங்காருபாளையம் கிளை தலைவராக முருகன், செயலாளராக பாலசுப்பிரமணியன், பொருளாளராக கதிரேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அண்ணாநகர் கிளை மாநாட்டில் தலைவராக முத்துசாமி, செயலாளராக தண்டபாணி, பொருளாளராக பாலன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.